## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**நாள்** 02.09.2025

**அசல் வழக்கு எண்.276/2020**

**வா.சா.1 – அருள்மொழி, க/பெ.சுப்பிரமணியன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கடந்த முறை விசாரணை செய்தபோது கடன்கள் இல்லை என்று சொன்னீர்கள் என்றால் சரிதான். ஏற்கனவே நீங்கள் வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் அந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தீர்கள் என்றால் சரிதான். மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தீர்கள் என்றால் சரிதான். அதன் பிறகு தான் இந்த வழக்குகளை தாக்கல் செய்தீர்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சென்னையில் வெங்கடாஜலபதி என்கிற வழக்கறிஞர் வாயிலாக நீங்கள் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் ஞாபகம் இல்லை. ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் சொன்ன விவரங்கள் அனைத்தும் நோட்டீஸில் சொல்லிவிட்டு நீதிமன்ற அவமதிப்பு செய்து விட்டதாக நோட்டீஸில் சொன்னீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. அந்த அறிவிப்புக்கு பதில் அறிவிப்பாக ஸ்ரீராம் என்ற வழக்கறிஞர் வாயிலாக அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. வங்கியில் கடன் வாங்கியதால் கடனை பைசல் செய்துவிட்டு செட்டில்மென்ட் எழுதியதாக நீங்கள் சொல்கிறீர்கள் அதனால் உங்களுக்கு ஏற்பட்ட இழப்பு என்ன என்றால் கொடுத்த பணத்தையே வாங்கியது இல்லை என்று சொல்லிவிட்டார்கள் பின்னாளில் இவ்வாறு மறுபடியும் வாங்கிய பணத்தையே இல்லை என்று சொன்னதனால் என்னுடைய மகள் கேட்டுக் கொண்டதால் வழக்கு தாக்கல் செய்தேன். மூன்றில் ஒரு பாகம் உண்டு என்று முதல் நிலை தீர்ப்பாணையில் சொல்லப்பட்டுள்ளது அதற்கு மேல் பல மேல்முறையீடுகள் உள்ளது பல நீதிமன்றங்களை வழக்கில் சந்திக்க வேண்டி

உள்ளது அதற்கு பதிலாக நீங்கள் அவசரப்பட்டு வழக்கு தாக்கல் செய்து விட்டீர்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதிகள் வாங்கிய கடன் தொகையைவிட வழக்கு சொத்து அதிக மதிப்புடையது என்றால் சரிதான். உங்களுக்கு மூன்றில் ஒரு பாகம் இருக்கும் பொழுது பிரதிவாதிக்கு மூன்றில் இரண்டு பாகம் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. உங்கள் மாமியார் பிரதிவாதிக்கு எழுதியது ஒரு குடும்ப ஏற்பாடு தான் என்றால் சரியில்லை. ஏற்கனவே ஒரு வழக்கு தீர்மானிக்கப்பட்டு மேல்முறையீடு நிலுவையில் இருக்கும்போது இந்த வழக்கு தேவையற்ற வகையில் தாக்கல் செய்துள்ளீர்கள் பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டும் என்று நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.